
# இயேசுவுடன் வாழ்தல்

பிள்ளைகளாகிய உங்களுக்கு இது ஒரு வழிகாட்டி

புத்தகம் ஆறு **6**

## நாம் எதைத் தெரிவு செய்கின்றோம்?



டெபின் கேர்க்

PHILIP

தமிழ் மொழிபெயர்ப்பு திருமதி வசந்தா அரியசிங்கம்

# இயேசுவுடன் வாழ்தல் 6

புத்தகம் ஆறு

பிள்ளைகளாகிய உங்களுக்கு இது ஒரு வழிகாட்டி

## நாம் எதைத் தெரிவு செய்கின்றோம்?

டெபின் கேர்க்

கெவின் மேஹியூ

WHAT DO WE CHOOSE ?

First Edition
Copyright 2004 Lanka Philip Mission.
All right reserved.

No part of this publication shall be reproduced or transmitted in any means, electronic, mechanical electronic, including recording photocopying, any retrieval and information storage system without permission in writing from the publisher.

ISBN 955 - 8673 - 44 - 7

Published & Distributed by
**Lanka Philip Mission.**

# இயேசுவுடன் வாழ்தல்

பிள்ளைகளுக்கான ஒரு வழிகாட்டி

இயேசுவைப் பற்றிய அறிவை பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுக்கும்
படி, டெபின் கோர்க் அவர்கள் இப்புத்தகத்தை ஆங்கில
மொழியில் எழுதியுள்ளார்.

இது எட்டு புத்தகங்களைக் கொண்டது. அவற்றுள் இது ஆறாவது புத்தகமாகும்.

"பிள்ளையும், பிள்ளையின் விசேஷ தோழன்" என்று இப்புத்தகத்தில் பெயர் சூட்டி இருக்கும் முதியவர் (வேதபாடசலை ஆசிரியை அல்லது ஆசிரியராக இருக்கலாம்) ஆகிய இருவரும் ஒன்று சேர்ந்து கிறிஸ்தவ விசுவாசத்தின் மூலக்கருத்துக்களை ஆராய்ந்து பார்த்தல் இங்கே இடம் பெறுகின்றது. இதன் மூலம் இயேசுவோடு கூட அவர்கள் இருவரும் வைத்துள்ள உறவும், அவர்கள் இருவர் மத்தியில் வைத்துள்ள உறவும் வளர்ச்சி பெறுகின்றது.

கிறிஸ்தவ விசுவாசத்தின் முக்கிய சிந்தனைகள் மூலம் பிள்ளையைக் குறித்து மிகவும் இலகுவாக விளக்கப்படுத்தியிருப்பதோடு, அதில் குறிப்பிடப்பட்டுள்ள வேதவசனங்களின் மூலம், படங்களை நிறந்தீட்டுவதின் மூலம், மனனம் செய்வதின் மூலம் மற்றும் இருவருக்கிடையில் ஏற்படும் சம்பாஷனையின் ஊடாகவும் கிறிஸ்தவ சிந்தனையானது மிகவும் ஆழமாக பிள்ளைகளுக்குள் கிரியை செய்கின்றது.

சீஷர்களை கட்டியெழுப்பும் போது பயன்படுத்தக் கூடிய விதத்தில் முழுமை பெற்ற பாடநெறியாக இப்புத்தகங்கள் அமைக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவ விசுவாசமானது பயிற்சிக்குரிய விதத்தில் கிரியை செலுத்துவதற்கும், இருவரும் சேர்ந்து ஜெபித்து, தேவன் ஜெபங்களுக்குப் பதில் அளிக்கின்றார் என்பதை அறிந்து கொள்ளுதல், ஆகியவை இப்புத்தகத்தில் அடங்குகின்ற படியால் பிள்ளைகள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.

"இயேசுவுடன் வாழ்தல்" புத்தகத்தினூடாக உங்கள்
ஜீவியத்திலும், உங்கள் உதவியை பெறும் பிள்ளையின் ஜீவியத்திலும்
ஒரு மாறுதல் அடைவதோடு, எமது கர்த்தராகிய இயேசு
கிறிஸ்துவுக்குள் சகல வழிகளிலும் வளர்ச்சி பெற இது
உங்கள் இருவருக்கும் நல்லதொரு வழிகாட்டி.

# பொருளடக்கம்


பகுதி 1: சந்தோஷமாக இருப்பதைத் தெரிந்து கொள்ளுதல் - 01

பகுதி 2: சந்தோஷமும் நானும் - 08

பகுதி 3: செய்ய வேண்டியதைத் தெரிந்து கொள்ளுதல் -13

பகுதி 4: பாதிக்கப்படுபவர் யார்? - 20

பகுதி 5: உங்களைக் கட்டுப்படுத்துபவர் யார்? - 27




# நாம் எதைத் தெரிவு செய்கின்றோம்?

6

புத்தகம் ஆறு

எனது பெயர் :- ______________________

எனது நண்பர் :- ______________________

எனது சபை :- ______________________

______________________

______________________

அன்று சந்திப்போம் :- ______________________

______________________

எனது விலாசம் :- ______________________

______________________

______________________

______________________

______________________

# 1

# சந்தோஷமாக இருப்பதைத் தெரிந்து கொள்ளுதல்



# சந்தோஷமாயிருப்பதைத் தெரிந்து கொள்ளுதல்

? இவற்றில் ஏதாவது உண்மையான சந்தோஷமென எண்ணுகின்றீரா?

உண்மையாகவே உம்மைச் சந்தோஷப் படுத்துவதை குறியிட்டுக் காட்டுக.

- ☐ நான் செய்கிறவற்றில், நான் சந்தோஷமாயிருக்கின்றேன்
- ☐ ஒரு அழகான படுக்கை அறை உண்டு
- ☐ நண்பர்களோடு இருத்தல்
- ☐ நல்ல உணவு
- ☐ நான் விரும்புவதைச் செய்ய நேரம் உண்டு
- ☐ கடற்கரையில் விடுதலையைக் கழித்தல்
- ☐ ஏதாவதொன்றில் திறமையாக இருத்தல்

அல்லது வேறு ஏதாவது என்று நீர் எண்ணுகின்றீரா?

நீர் வேறு ஏதாவது என்று எண்ணினால், உமது உள்ளத்தின் ஆழத்தில் நிலைத்திருக்கும் சந்தோஷத்தைக் கொண்டு வருவது, எது என நீர் எண்ணுகின்றீர்?

______________________________

______________________________

**கே**

யாராவது, எப்பொழுதாவது இப்படிக் கேட்டதுண்டா?

'உங்களுடைய உணவில் நீங்கள் சந்தோஷமாக இருக்கின்றீர்களா?'


ஆம் /இல்லை

உண்மையான சந்தோஷம் உடைகளிலா, அல்லது உணவிலா?

ஆம் /இல்லை

உலக இராஜ்யத்தில் தங்களைச் சுற்றியுள்ளவர்களே சந்தோஷம் என மக்கள் எண்ணுகின்றார்கள். எங்களைச் சுற்றியுள்ள காரியங்கள் மாறும் பொழுது, சந்தோஷத்திலும் மாற்றம் ஏற்படும்.

மக்கள், தங்களைச் சந்தோஷப்படுத்தும் பொருட்கள்
என நம்பும் பொருட்கள் இவை.



இவற்றில் சில சந்தோஷப்படுத்தும், ஆனால் அந்த சந்தோஷம் நிலைத்திருக்கமாட்டாது.


**சங்கீதம் 126:2, 3ஐ வாசிக்கவும்.**

மக்களுடைய வாய்கள் ........................................................
ஆல் நிறம்பியிருந்தது.

அவர்களுடைய நாவுகள் ........................................................
நிறைந்திருந்தது.

ஏதோ ஒன்று அவர்களை *உண்மையாகவே சந்தோஷப்படுத்தியது.*

அவர்கள் ஏன் சந்தோஷமாக இருந்தார்கள் என்று, 3ஆம் வசனம் கூறுகின்றது.



"கர்த்தர் ..............................

.................................................

செய்தார்; இதினிமித்தம் நாம்

..............................

................................................."

மக்கள் மிகவும் சந்தோஷமாக இருந்தார்கள். ஏனென்றால்,

______________________________________________

______________________________________________

______________________________________________





இயேசு நமக்குச் செய்த

*நல்ல காரியங்களை*


நாம் நினைவு கூருவதைத் தெரிந்து கொள்ளும்


பொழுது, நாமும் இது போல சந்தோஷமாக

இருக்கலாம்.

நாம் நேசிக்கின்றவர்களையும், நம்மை நேசிக்கின்றவர்களையும் கொண்டிருப்பதே கடவுளுடைய இராஜ்யத்தில் சந்தோஷம் ஆகும்.

நீங்கள் நேசிக்கின்ற மக்கள், குடும்பம், நண்பர்கள், கலக்குழு அங்கத்தவர்கள் போன்றோருடைய பெயர்களை நீங்கள் இருவருமாக எழுதுங்கள் அல்லது அவர்களை வரையுங்கள்.






நாம் ஆரம்பத்தில் கூறிய, அநேக பொருட்களை வைத்திருத்தலிலும் சந்தோஷமென்பது வேறு பட்டது என, இயேசு மத்தேயு 5இல் கூறுகின்றார்.

உங்களைச் சந்தோஷப்படுத்தும் என அவர் கூறும் சில பொருட்கள் இங்கு தரப்பட்டுள்ளன. இம்மக்களில் நீர் ஏதாவது ஒருவராக இருந்தால் அதைக் குறியிட்டுக் காட்டுக.

☐ கடவுள் தங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பார் என்று அறிந்து கொண்ட மக்கள் சந்தோஷமாக இருப்பார்கள்.

☐ இயேசு தங்களை நேசிக்கின்றார் என்பதை அறிந்த மக்கள் சந்தோஷமாக இருப்பார்கள்.

☐ தாங்கள் கடவுளுடைய பிள்ளைகள் என்று அறிந்து கொண்ட மக்கள் சந்தோஷமாக இருப்பார்கள்.

# மனன வசனம்





கர்த்தர் நமக்குப் பெரிய
காரியங்களைச் செய்தார்; இதினிமித்தம்
நாம் மகிழ்ந்திருக்கிறோம்.

சங்கீதம் 126 : 3

# மேலும் அதிகமாக இணைந்து பகிர்ந்து கொள்ளுதல்

## கே

1. இயேசு உங்களுக்குச் செய்த, எத்தனை நல்ல காரியங்களை உங்கள் இருவராலும் சிந்திக்க முடியும்.



நீர் எங்களுக்குச்
செய்த எல்லா
நல்ல
காரியங்களுக்காகவும்
நன்றி, இயேசுவே.

சந்தோஷமான பாடல்களோடும், சிரிப்போடும் ஒவ்வொரு நாளும் அவருக்கு நன்றி சொல்ல மறக்க வேண்டாம்.

# 2

# சந்தோஷமும், நானும்



# சந்தோஷமும், நானும்

இயேசு மத்தேயு 5இல் தரும், நாம் சந்தோஷத்தைக் கண்டு கொள்ளக் கூடிய இன்னும் சில வழிகளை இங்கு தருகின்றோம்.

இந்த மக்களில் ஒருவராக நீர் இருந்தால் குறியிடுக . . .


- [ ] மற்றவர்களை நேசிக்கின்ற மக்கள் சந்தோஷமாக இருப்பார்கள்.
- [ ] பரிதாபகரமான மக்களுக்கு சமாதானத்தைக் கொண்டு வரும் மக்கள் சந்தோஷமாக இருப்பார்கள்.
- [ ] இயேசுவைப் பின்பற்றும் மக்கள் என யாவராலும் அறிந்து கொள்ளப்பட்ட மக்கள் சந்தோஷமாக இருப்பார்கள்.

பல விதமான மக்கள் இருக்கின்றார்கள்.

சிலர் எப்பொழுதுமே சந்தோஷமாக இருந்ததில்லை.

சிலர் சில வேளைகளில் துக்கமாகவும், சில வேளைகளில் சந்தோஷமாகவும் இருப்பார்கள்.

**சில மக்கள், அவர்கள் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் போதியளவு சந்தோஷத்தைக் கொடுப்பார்கள்.**



# கே

நீரும், உமது சந்தோஷமும் எப்படியானது?

நீர் என்ன உணர்கின்றீர் என்று அறிய, இயேசு ஆவலாயிருக்கின்றார். எனவே உம்மைப் பற்றி அவருக்குச் சொல்லக் கூடிய வரிகளைக் குறிப்பிடுக.

நான் சிரிப்பதை மக்கள் ஒரு போதுமே காணமாட்டார்கள்.

ஒரு சந்தோஷமான மனிதனாகவே என்னை மக்கள் காண்கின்றார்கள்.


நான் மாறுகின்றேன், நான் திடமனதில்லாதவனாக இருக்கின்றேன்.

நான் ஒரு நாளிலிருந்து, மறு நாளில் என்ன விதமாக இருப்பேன் என்று எனக்குத் தெரியாது.

## 150 ஆம் சங்கீதம் ஒரு சந்தோஷமான சங்கீதம், நான் அதை விரும்புகின்றேன்.

பல விதமான வாத்தியங்களை இசைத்து, சந்தோஷமான இசையை ஏற்படுத்தி கடவுளைத் துதிக்கும் படி, இச்சங்கீதம் கூறுகின்றது.

சங்கீதத்தில் கூறப்பட்ட இசைக்கருவிகளை, ஒவ்வொரு வட்டத்தில் ஒவ்வொன்றாக வரைக.




# மனன வசனம்




**சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக.**


சங்கீதம் 150 : 6

# மேலும் அதிகமாக இணைந்து பகிர்ந்து கொள்ளுதல்





1. உம்மையும், உமது சந்தோஷத்தைப் பற்றியும் 10 ஆம் பக்கத்தில் நீர் குறியிட்ட பதிலைப் பற்றி இருவருமாகக் கதைக்கவும்.



2. உமது ஆலயத்தில் வழிபாட்டை நடத்துபவர் யார்?

   உமது ஆலயத்தில் உபயோகிக்கப்படும் இசைக்கருவிகள் என்ன?

3. இருவருமாக இணைந்து, உங்கள் வழிபாட்டுத் தலைவருக்கு, அவர் செய்யும் யாவற்றிற்கும் நன்றி செலுத்தி ஒரு கடிதத்தை எழுதுங்கள். அல்லது, ஒரு விசேஷ பரிசைத் தயாரியுங்கள். இணைந்து சென்று வழிபாட்டுத் தலைவருக்கு அதைக் கொடுப்பதற்கு ஒழுங்கு செய்யுங்கள்.





4. உங்கள் வழிபாட்டுத் தலைவருக்காக இணைந்து ஜெபியுங்கள்.

# 3

# செய்ய வேண்டியதை தெரிந்து கொள்ளுதல்



# செய்ய வேண்டியதைத் தெரிந்து கொள்ளுதல்

கடவுளுடைய இராஜ்யத்தில்
பொய் சொல்லுதல், திருடுதல், .............................. போன்ற

எப்பொழுதுமே பிழையான ✗

சில காரியங்கள் உண்டு.

மக்கள் மேல் கரிசனையாய் இருத்தல், இயேசுவிற்குச் செவி கொடுத்தல் .................................. போன்ற

எப்பொழுதுமே சரியான ✓

சில காரியங்கள் கடவுளுடைய இராஜ்யத்தில் உண்டு.

நான் உங்களுக்கு இரண்டு சிறிய கதைகளைக் கூறப் போகின்றேன். ஒவ்வொன்றிற்கும் ஒரு முடிவைப் போடப் போகின்றேன். மிகவும் கவனமாகச் சிந்திக்கவும்.

யோவானும், அந்திரேயாவும் ஒரு கடைக்குச் சென்றார்கள். அங்கு யோவான் ஒரு அழகான இனிப்பைக் கண்டான். ஆனால் அதற்குச் செலுத்துவதற்கு போதிய பணம் அவனிடம் இல்லாதமையால், தான் கடைக்காரனுடன் கதைத்துக் கொண்டிருக்கும் நேரத்தில் அதைத் திருடும் படி அந்திரேயாவைக் கேட்டான்.
அந்திரேயா என்ன செய்வான் ?

நான் எண்ணுகின்றேன் அந்திரேயா ------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------

நீர் எழுதியதை அந்திரேயா செய்திருந்தால், என்ன நடந்திருக்கும் ?
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------

சரனியும், சாந்தியும் பாடசாலையில் இருந்தார்கள். மற்றப் பிள்ளைகள் அவர்களை நோக்கி, இயேசுவைக் குறித்து என்ன நினைக்கின்றீர்கள் என்று கேட்டார்கள். சரனி, அவர்கள் தங்களைப் பார்த்து நகைக்கக் கூடும் என எண்ணி, ஒன்றும் கூற வேண்டாம் என்று சாந்தியை எச்சரித்தாள். சாந்தி என்ன செய்திருப்பாள்?

நான் எண்ணுகின்றேன் சாந்தி ----------------------------------------
----------------------------------------
----------------------------------------
----------------------------------------

நீர் எழுதிய மாதிரி சாந்தி செய்திருந்தால், என்ன நடந்திருக்கும்?
----------------------------------------
----------------------------------------
----------------------------------------

அந்திரேயாவும், சாந்தியும் தெரிவு செய்ய வேண்டும்.


சரியான அல்லது பிழையானதை தெரிவு செய்ய உமக்குக் கிடைத்த ஒரு வேளையைப் பற்றி, ஒரு படம் வரையவும் அல்லது ஒரு கதை எழுதவும்.

அந்திரேயாவும், சாந்தியும் தெரிவு செய்ய வேண்டும் - இயேசுவைக் குழப்புவதற்கு அல்லது, அவர்களின் நண்பரைக் குழப்புவதற்கு.

கடவுளுடைய இராஜ்யத்தில், சில காரியங்கள் சரியானது அல்லது பிழையானது என்று தெளிவாக வேதாகமம் எமக்குச் சொல்லும் பொழுது, நாம் எப்பொழுதும் கவனமாக இயேசுவிற்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.

அவர், எங்களை அதிகமாக நேசிப்பதுடன், அவர் எங்களை ஒரு செயலைச் செய்யச் சொல்லும் பொழுது, அதை நாங்கள் அந்த வேளையில் விளங்கிக் கொள்ளாவிட்டாலும், அது நமக்கு நல்லது என்றபடியாலே சொல்லுகின்றார்.

**இயேசுகிறிஸ்துவுக்கு முதலிடம் கொடுக்கப் படுகின்றது.**



அப்போஸ்தலர் படிகள் 5 : 29ஐ வாசிக்கவும்.

.............................................. கீழ்ப்படிகின்றதைப் பார்க்கிலும்
........................................................ அவசியமாயிருக்கிறது.

இயேசுவைப் பற்றிக் கதைக்க வேண்டாமென்று பேதுரு கேட்கப்பட்டாலும், அவன் மனிதனிற்குக் கீழ்ப்படிதலை அல்ல கடவுளுக்குக் கீழ்ப்படிதலையே தெரிந்து கொண்டான்.

சில சந்தர்ப்பத்தில் நாமும் அவரைப் போலவே தெரிவு செய்ய வேண்டும்.

சில வேளைகளில் வேதாகமம் உறுதியாக "ஆம்" அல்லது "இல்லை" என்று சொல்லாத காரியங்கள் உண்டு.

அப்பொழுது நாம் மற்ற மக்களைப் பற்றி, மிகவும் கவனமாகச் சிந்திக்க வேண்டும்.

நீர் எவற்றைச் செய்வீரென குறியிடுக . . .

☐ மற்ற ஒருவரைக் குழப்புவதாக இருந்தாலும், நான் விரும்புவதையே செய்வேன்.

☐ மற்ற மக்களைக் குழப்பும் காரியத்தை நான் செய்ய விரும்பாது விட்டாலும், எனது வழியில் செல்ல முடியாதமைக்காக கோபம் அடைவேன்.

☐ மற்ற மக்களுக்காக சிந்திப்பேன். நான் அவர்களை நேசிப்பதால், (அகாப்பே) அவர்களின் உணர்வு என்ன என்பது உண்மையாகவே முக்கியமானது.

**ரோமர் 14 :19ஐ வாசிக்கவும்.**

பிழையான சொற்களை வெட்டி விடவும்.

ஆனபடியால்
எமது வழிகளை நாடுவதற்கு/
சமாதானத்திற்கு அடுத்தவைகளை/
மக்களைக் குழப்புபவைகள் ஆனபடியால்
மக்களைக் குழப்புவதற்கு/ எமது வழிகளை
நாடுவதற்கு/ சமாதானத்திற்கு
அடுத்தவைகளை நாடுவதற்கு
ஏதுவான சில/ சிறிய/ முழு
முயற்சியும் எடுப்போம்.



# மனன வசனம்




**மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது.**

அப்போஸ்தல நடபடிகள் 5 : 29

# மேலும் அதிகமாக இணைந்து பகிர்ந்து கொள்ளுதல்

1. நீர் உமது வழிபாட்டுத் தலைவரைச் சந்திக்கச் சென்ற போது, என்ன நடந்தது என்று கதைக்கவும்.



2. வழிபாட்டுத் தலைவருக்காக மீண்டும் இணைந்து ஜெபிக்கவும்.



3. நண்பனில் வழியில் அல்லது, கடவுளுடைய வழியில் ஒரு காரியத்தை செய்வதற்குத் தெரிவு செய்யும் மக்களைப் பற்றி இருவரும் ஒரு மிகவும் சிறிய கதையை எழுதவும், அல்லது ஒரு படத்தை வரையவும்.

4. ஒருவருக்கு ஒருவர் கதையை வாசித்துக் காட்டவும், அல்லது படத்தைப் பற்றிக் கதைக்கவும்.

# 4


# பாதிக்கப்படுபவர் யார்?



# பாதிக்கப்படுபவர் யார்?

பரிசுத்த ஆவியானவர் மிக, மிக சந்தோஷமற்றவர் ஆவார் என்று நீர் அறிவீரா?

அவரையும், எங்களையும் சந்தோஷமற்றவர்களாக்கும் சில காரியங்கள் உண்டு.



**எபேசியர் 4 : 30ஐ வாசிக்கவும்.**

பரிசுத்தவியைத் ........................................................ படுத்தாதிருங்கள்.
அதன் அர்த்தம், அவரை மிகவும் சந்தோஷமற்றவராக ஆக்காதிருங்கள்.

31ஆம் வசனம் அவரைத் துக்கப்படுத்தும் சில காரியங்களைச் சொல்லுகின்றது. இவை இரண்டு - அவை எது என்று உம்மால் ஊகிக்க முடியுமா?

ம் டு க ங் ப கோ ..... ..... ..... ..... ..... .....

ம் தூ ண ஷ ..... ..... ..... .....

கடுங்கோபம் என்பதன் அர்த்தம், ஒருவரை <u>அழிக்க</u> வேண்டுமென்ற உணர்வு வருகின்ற அளவு உண்மையான கோபம் ஆகும்.

தூஷணம் என்பதன் அர்த்தம் ஒருவரை <u>அழிக்கவும், பாதிக்கவும்</u> கூடிய சொற்களைச் சொல்லுதல் ஆகும்.



**கே**


நீர் எப்பொழுதாவது இப்படி நடந்து கொண்டது உண்டா?

ஆம் / இல்லை

இந்த வழிகளில் நீர் நடக்கும் பொழுது, பாதிக்கப்படும் மக்களை வட்டமிட்டுக் காட்டுக.

கடுங்கோபம் - உண்மையான கோபம்.


தூஷணம் - உண்மையாகவே அன்பற்ற சொற்கள்.





சில வேளைகளில் இவர்கள் எல்லோரும் - ஆனால் பரிசுத்த ஆவி எப்பொழுதுமே துக்கப்படுவார். ( மிகவும் பாதிக்கப்படும் ) நீரும் அது போலவே பாதிக்கப்படுவீர்.

ஒருவர் எம்முடன் மனவெறுப்பூட்டுகிற விதத்தில் நடந்து கொண்டாலும், இந்த விதமாக நாம் நடந்து கொள்வதை இயேசு விரும்புவதில்லை.

மக்கள் அவரிடம் மனவெறுப்பூட்டுகிற விதத்தில்
நடந்து கொண்ட பொழுது, இயேசு இதையே செய்தார்.



'பிதாவே இவர்களுக்கு மன்னியும்'



மக்கள் உம்மைப் புண்படுத்தும் பொழுது, அவர்களை மன்னிப்பது இலகுவான காரியம் என்று நீர் எண்ணுகின்றீரா?

______________________________

நீர் மக்களை மன்னிக்காவிட்டால், உமது உள்ளத்தில் பயங்கரமான உணர்வுகள் இருக்கும். இவை அவற்றில் சில; இன்னும் அதிகமாக உம்மால் சிந்திக்க முடியும்.




**இந்தக் காரியங்கள் உம்மில் இருந்தால், அவை உம்மைப் பாதிக்கும். எனவே மற்ற மக்களை மன்னிப்பது உமக்காகவே ஆகும்.**

அதை நீர் அறிவீரா?

______________________________

அதை நாங்கள் உணர்ந்து கொண்டால், அது எங்களுக்கு நல்லது. அது மன்னிப்பதை இலகுவாக்குகின்றது அல்லவா?

______________________________

எங்களைத் தடுக்கும் ஒரே ஒரு காரியம், சில வேளைகளில் அந்தப் பயங்கரமான உணர்வுகளை அனுபவிக்க நாம் விரும்புகின்றோம்.

*ஓ, அன்பானவரே!*

நீங்கள் மன்னிக்கும் பொழுது, உங்களுக்குள்ளே நல்ல உணர்வுகள் இருக்கும். கலாத்தியர் 5 : 22 இல் மேலும் சில நல்ல உணர்வுகளைப் பற்றி உங்களுக்குக் கூறப்பட்டுள்ளது.

தயவு

______________________ ______________________

______________________

நீடிய பொறுமை அன்பு

______________________ ______________________

______________________

எனவே, மன்னித்தல் என்பது செய்வதற்குரிய ஒரு அற்புதமான காரியமாகும்!

கே

நீர் மன்னிக்க வேண்டிய மக்கள் யாராவது இருக்கின்றார்களா?


______________________

அவர்கள் யார்? ______________________

______________________

உம்மால் அவர்களை மன்னிக்க முடியுமா? ______________

**எபேசியர் 4 : 32ஐ வாசிக்கவும்.**



மக்களை நடத்த வேண்டிய இரண்டு நல்ல வழிகள் இவை

வு த ய ..... ..... .....

ன் த னி ல் த் ம ..... ..... ..... ..... ..... .....

தயவாகவும், மன்னிப்பவர்களாகவும் நீங்கள் இருப்பதற்கு இயேசுவிடம் உதவி கேளுங்கள்.


# மனன வசனம்





ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

எபேசியர் 4 : 32

# மேலும் அதிகமாக இணைந்து பகிர்ந்து கொள்ளுதல்



1. தன்னைப் புண்படுத்திய ஒருவரை, அவர் மன்னித்து விட்டது பற்றிச் சொல்லும் படி உமது விசேஷித்த நண்பரைக் கேட்கவும்.



2. இந்த வாக்கியங்களைப் பூர்த்தி செய்து, ஒரு கவிதை எழுதுக. (பூரணமடையும் வரை ஒவ்வொரு வரியாகச் செய்யவும் )

இயேசு சொன்னார் . . .

நான் உன்னை மன்னிக்கின்றேன் ஏனென்றால், ————

நான் உன்னை மன்னிக்கின்றேன் ஏனென்றால், ————


நான் உன்னை மன்னிக்கின்றேன் ஏனென்றால், ————

நான் உன்னை மன்னிக்கின்றேன் ஏனென்றால், ————

நான் உன்னை மன்னிக்கின்றேன் ஏனென்றால், ————

நான் உன்னை மன்னிக்கின்றேன் ஏனென்றால், ————

அத்துடன் நீர் எனக்கு மதிப்பற்றவராக இருக்க முடியாது.



3. அடுத்த முறை நீர் கடவுளுடைய இராப்போசனத்தில் பங்கு கொள்ளும் பொழுது, உமது கலக்குவில் இதை வாசிப்பதற்கு உமது கலத் தலைவரைக் கேட்கவும்.

# 5

# உங்களைக் கட்டுப்படுத்துபவர் யார்?



# உங்களைக் கட்டுப்படுத்துபவர் யார்?

உம்மிடத்தில் ரிமோட் மூலம் கட்டுப்படுத்தும் ஒரு விளையாட்டுப் பொருள் - அல்லது தொலைக்காட்சி இருக்கின்றதா?

அந்த ரிமோட் மூலம் தொலைக்காட்சியைக் கட்டுப்படுத்தலாம். ஒரு பொத்தானை மாற்றலாம், சத்தத்தை கூட்டலாம் அல்லது குறைக்கலாம்.

**1 யோவான் 5 :19ஐ வாசிக்கவும்.**

உலகத்தைக் கட்டுப்படுத்துபவர் யார்?

______________________________

சாத்தான் (தீய சக்தி ஒன்று) வித்தியாசமான வழிகளில் இதைச் செய்கின்றான். அவற்றில் ஒன்று, மற்றவர்கள் எங்களைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்ற பயத்தை நம்மில் ஏற்படுத்துதல்.

**மத்தேயு 26 : 69 - 75ஐ வாசிக்கவும்.**

தனக்கு இயேசுவைத் தெரியாது என்று பேதுரு ஏன் சொன்னான்?

______________________________

______________________________

இது போன்று நீர் எப்பொழுதாவது உணர்ந்ததுண்டா?

______________________________


______________________________

போதுரு தனது எண்ணங்களையும், உணர்வுகளையும் சாத்தான் கட்டுப்படுத்துவதற்கு இடம் கொடுத்ததால் தான், பிழையானதைத் தெரிவு செய்தான்.

புத்தகம் 5, பலமான பற்றுதல்கள் என்பதைப் பாருங்கள். பேதுரு தனது எண்ணங்களை (உள்ளம்), தெளிவு (மன உறுதி), உணர்வுகள் (மன எழுச்சி) யாவற்றையும் சாத்தான் கட்டுப்படுத்துவதற்கு விட்டதால், அவனது ............................ பாதிக்கப்பட்டது.

இயேசுவைப் பற்றிய காரியங்களை விட, சுற்றியிருந்த ஜனத்தின் கருத்தைப் பற்றியே அதிகமாகச் சிந்தித்தான். அவன் ஜனத்திற்குப் பயந்தான்.

இதைப் பற்றிய படத்தை வரைக.



நீர் பயப்படும் படியான விடயங்கள் உமக்கு இருந்தால், உமது உள்ளத்தை சாத்தானால் கட்டுப்படுத்த முடியும்.

?

நீர் பயப்படும் விடயம் உண்டா? ____________________

____________________

அவ்விடயங்கள் எவை? ____________________

____________________

கே

உமது வாழ்வை யார் கட்டுப்படுத்த வேண்டுமென நீர் விரும்புகின்றீர்? ____________________

அவை பற்றி இணைந்து ஜெபிக்கவும். அடுத்த பக்கத்தில் இரண்டு பெயர்கள் உண்டு; உமது வாழ்வைக் கட்டுப்படுத்த வேண்டுமென நீர் விரும்புவதற்கு வர்ணம் தீட்டவும்.

# சாத்தான்

## உலகத்தின் இராஜ்யம்

## அல்லது

# இயேசு

## கடவுளின் இராஜ்யம்


# மனன வசனம்





**நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே, பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்.**

1 யோவான் 3 : 1

# மேலும் அதிகமாக இணைந்து பகிர்ந்து கொள்ளுதல்




1. பிள்ளைகளாக இருந்த பொழுது அவர்கள் பயப்பட்ட, இப்பொழுது பயப்படாத விடயங்கள் பற்றிக் கூறும் படி உங்கள் விசேஷித்த நண்பனிடம் கேளுங்கள்.



அந்தப் பயங்களிலிருந்து அவர்கள் விடுபட்டதற்காக, நீங்கள் இணைந்து இயேசுவிற்கு நன்றி சொல்லுங்கள்.



2. சில பலுன்களை ஊதிப் பறக்க விடுங்கள். உங்களைப் பயப்படுத்துகின்ற விடயங்களை அவற்றின் மேல் எழுதுங்கள் - அவற்றை வெளியே எடுத்துக் கொண்டு போய், இப்படிச் சொல்லிக் கொண்டு ஒவ்வொன்றாக அவற்றை உடையுங்கள். நான் - (நீர் எழுதியிருக்கும் விடயத்தைக் கூறி ) இதிலிருந்து விடுதலை பெற்றதற்காக நன்றி இயேசுவே.



கடைசிப் பலுானை உடைக்கும் பொழுது நீங்கள் இருவரும் இணைந்து பலமாகக் கை தட்டுங்கள்.

இந்தப் புத்தகத்திலிருந்து உங்கள்
இருவருக்கும் விருப்பமான வசனத்தை இவ்விடத்தில்
எழுதுங்கள்.

இந்த புத்தகத்திலிருந்து உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், உங்கள் விசேஷித்த நண்பனிடம் கேட்பதற்காக அவற்றை இங்கு எழுதுங்கள்.



# இயேசுவுடன் வாழ்தல்


புத்தகம் 1: கடவுளுடைய குடும்பத்திற்குள்வரவேற்கின்றோம்
புத்தகம் 2: விசேஷ நேரங்களும்,ஈவுகளும்.
புத்தகம் 3: பேசுதலும்,கேட்டலும்.
புத்தகம் 4: என்மீதுள்ள அன்பும், மற்றவர்கள்மீதுள்ள அன்பும்.
புத்தகம் 5: பலமான பற்றுதல்கள்.
புத்தகம் 6: நாம் எதைத் தெரிவு செய்கின்றோம்?
புத்தகம் 7: விசுவாசம்வைத்தல்.
புத்தகம் 8: இணைந்துபோராடுதல்.


வேதாகமப் பகுதிகள், சொல் கண்டு பிடித்தல், வர்ணம் தீட்டுதல், மனன வசனங்கள், அதற்கும் மேலாக பெரியவர்கள் சிறியவர்கள் மத்தியில் பகிர்ந்து கொள்ளுதல் போன்றவற்றிற்கூடாக கொள்கைகள் இலகுவான முறையில் விளக்கப்படுத்தப்பட்டும், பலப்படுத்தப்பட்டும் உள்ளன. ஒவ்வொரு பகுதியும் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளன.

ஒரு தொனிப்பொருள் தலைப்பு.
விளக்கங்களும், நடவடிக்கைகளும்.
ஒரு மனன வசனம்.
மேலும் இணைந்து பகிர்ந்து கொள்ளுவதற்கு ஏதுவாக தெளிவாகத் தயார் செய்யப்பட்டதும்,
இலகுவாகப் பின்பற்றக் கூடியதுமான ஆலோசனைகள்.

விசுவாசத்தை நடைமுறைப்படுத்தவும், இணைந்து ஜெபித்தலை ஊக்குவிக்கவும், கடவுள் ஜெபங்களுக்குப் பதில் அளிக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தவும் ஏற்ற ஆலோசனைகளுடன் கூடிய, இந்த எட்டுப் புத்தகங்கள், ஒரு பூரண சீஷத்துவப் பயிற்சியை உருவாக்குகின்றன.

தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாக் காரியங்களிலும் வளருவதற்கு, கிறிஸ்துவுடன் வாழ்தல் உங்கள் இருவரிலும் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன், உதவவும் செய்யும்.

அத்துடன் டப்னி கேர்க்கின்

வாரிசுகள் இணைந்து தலைமுறைகள் மத்தியிலான கலச் சபையை ஸ்தாபித்திருக்கின்றார்கள்.

ஆதரிப்பவரும்,பிள்ளையும் இப்பிரதிகளில் இருந்து பல நல்லவற்றைப் பெற்றுக் கொண்டு, பெறுமதியான ஆதரிப்பை வளங்குவதை உறுதி செய்கின்றது.

ஒரு பிள்ளை ஞானஸ்நானம் பெறவேண்டுமெனக் கேட்கும் பொழுது, இது குருமாருக்கும், கலத்தலைவர்களுக்கும், ஆதரிப்பவர்களுக்கும் கையேடாக இருக்கின்றது.

கையோடு கை சேர்த்து, இயேசுவுடன் வாழ்தல் மூலம் ஒரு பிள்ளையை ஆதரிக்கின்றார்கள்.


Thanks to All Nations Methodist Church Korea, (Rev. Lim, Jae Tack) who Sponsored this book for printing. So that we make this book available at reduced cost. His contribution is gratefully appreciated.





LANKA PHILIP MISSION
32/6,1/2, Averihena Road,
Polhengoda,Colombo 05
Sri Lanka.
Tel : 2818095



ISBN 955-8673-44-7


Rs.40/=